2005 பிப்ரவரி 3]

22—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***31622—திரு. கே.சி. கருப்பணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இப்பொருள்மீது தற்போது கருத்துரு எதுவும் அரசின் பரிசீலினையில் இல்லை. (ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

முற்பகல் 10-25

திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தங்கத் தாரகை தமிழக முதலமைச்சர்; சுனாமியை சூறாவளியாக வென்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். பவானி நகரம் இப்போது இந்தியாவிலேயே ஜமக்காளம் நகரம் என்று பெயர் பெற்றது. இப்பொழுது பவானி நகரத்திலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் கோபிச்செட்டிப்பாளையத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் உள்ளது. பவானியைச் சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயம் நல்லமுறையிலே சிறந்து விளங்குகின்றது. ஆகவே விவசாயப் பெருங்குடி மக்களும், வியாபாரப் பெருங்குடி மக்களும், இரண்டு சக்கரம், நான்கு சக்கரம் வாகனங்களை அதிகமாக உபயோகப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அடுத்த ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதற்கு ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தளவிலே ஏற்கெனவே ஈரோடில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், பவானியில் இருந்து

30 கிலோ மீட்டர் தொலைவில் கோபிச்செட்டிப்பாளையத்தில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், அங்கிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில், பெருந்துறைப் பகுதியில் ஒரு பகுதி அலுவலகமும் இயங்கி வருகின்றன. ஆக, அந்தப் பகுதியிலே இருக்கிற வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, இன்னும் சொல்லப்போனால் அதற்குக் கூடுதலாகவே அங்கே போக்குவரத்து அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. ஆக, கூடுதலாக ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அங்கே அமைப்பதற்குரிய வாகனங்களின் எண்ணிக்கை, போதுமான அளவில் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, நேரடியாக ஒரு புதிய மாவட்டம் ஏற்படுத்துகின்றபோதுதான் அங்கே புதியதாக - அந்தப் புதிய மாவட்டத்திற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்பட்டு வருகிறது. மற்றப் பகுதிகளில் பகுதி அலுவலகம்தான் ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த ஆண்டிலாவது இதுபற்றி அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு இருக்கிறார். இது பற்றி அரசு சிந்திக்கும் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கே.சி. கருப்பணன்*

திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, பெருந்துறையில் உள்ளதுபோல் ஒரு பகுதி நேர வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாவது அமைத்துக் கொடுக்கப்படுமா என்று பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு வட்டாரப் பகுதி நேர அலுவலகம் ஏற்படுத்துவதற்குரிய அளவிற்கு அங்கு வாகனங்களின் எண்ணிக்கை இருக்குமானால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 23, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.*